**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 26.03.2026**
**OS. No. 286/2015**
**வழக்கு சாட்சி PW.1–ரத்தினசாமி, த/பெ.சின்னப்பகவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

27) முந்தைய விவாரணைக்கு பிறகு அ.வ.எண்.9/2005 பற்றிய வழக்கின் விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 13.03.2002 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் ஏதேனும் வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை, 03.05.2002 தேதியிட்ட தடவழி பத்திரத்தின் பேரில் தான் பரிகாரம் கோரியுள்ளேன். அந்த தடவழி பத்திரமானது எனக்கும், என் சித்தப்பா பெரியசாமி, என் சகோதரர் சண்முகம் ஆகியோர்களிடையே ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பெரியசாமி மற்றும் சண்முகம் ஆகியோர் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

28) அ.வ.எண்.9/2005 ல் மேற்கண்ட பாகபிரிவினை மற்றும் தடவழி பத்திரம் ஆகிய இரண்டையும் சரிவர பரிசீலனை செய்து, தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் அந்த தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. கொள்நிலை முன் தீர்ப்பு தடை என்ற கோட்பாட்டின் படி மேற்படி ஆவணங்கள் குறித்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. ஒரு பத்திரத்தில் கண்ட நபர்கள் அந்த பத்திரத்தை பொறுத்து ஒரே பிரதிவாதிகள் மீது தனித்தனியாக ஒரே பரிகாரம் கோரி வழக்கிட முடியாது என்றால் சரியல்ல.அ.வ.எண்.9/2005 என்ற வழக்கை முழுமையாக மறைத்து கவனமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

29) மேற்கண்ட வழக்கில் ச.எண்.1051/2, 1052/2 ஆகிய சொத்துக்களின் வழியாக பைப்லைன் கொண்டு செல்லும் உரிமையும், அதில் செல்லும் வண்டிப்பாதையை அனுபவிக்கும் உரிமையும் இதே நீதிமன்றத்தால் அந்த வழக்கில் நிலை நிறுத்தி

காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தடவழி குறித்து எனக்கு எழுதி கொடுத்த பத்திரத்தை அது எந்த தடையும் செய்யாது. எனக்கு அந்த வழக்கை குறித்து முழுமையாக தெரிந்து தான் நான் தற்போது மேற்சொன்ன பதிலை கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதிகளின் கிணற்றை மூடிவிட்டு, அதன் வழியாக பைப்லைன் எடுத்து செல்லும் ஒப்பந்தம் ரத்தினசாமி ஆகிய நானும், தங்கராஜ் ஆகியோரிடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை.

30) மேற்கண்ட அ.வ.எண்.9/2005ல் என்னையோ, தங்கராஜையோ சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தங்கராஜை சாட்சியாக விசாரிக்கபோகிறேனா என்றால் இல்லை. அந்த வழக்கின் தீர்ப்பில் இதையும் ஒரு காரணமான சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சுப்ரமணியன் என்பவர் யார் என்றால் பெரியசாமியின் மகன் ஆவார். மேற்படி தங்கராஜ் என் சித்தப்பாவின் மகன் ஆவார். சுப்ரமணியன் மற்றும் தங்கராஜ் இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். சண்முகம் என்பவர் என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

31) மேற்கண்ட அ.வ.எண்.9/2005 என் சகோதரர் சண்முகம் தான் தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. எனக்கும், சண்முகத்திற்கும் எவ்வித விரோதமும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்தது குறித்து சண்முகத்திடம் நான் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. சுப்ரமணி, தங்கராஜ், சண்முகம் மற்றும் ரத்தினசாமி(சாட்சி) ஆகியோர்கள் உடன் பங்காளிகள் என்றும், பிரதிவாதிகள் மீது மாறி மாறி வழக்கு தாக்கல் செய்து பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல, என்னுடைய வண்டித்தடத்தை தடுத்தால் வழக்கு தாக்கல் செய்தேன்.

32) ச.எண்.1051/1ல் இருந்து ச.எண்.1052/4ல் உள்ள நிலத்திற்கு பூமியின் அடியில் குழாய் பதித்து நீர் கொண்டு செல்வதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. மேற்கண்ட சங்கதி தொடர்பாகத்தான் எங்களுக்குள் ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தம் எழுதப்பட்ட பிறகு, பிரதிவாதியின் கிணற்றை மூடிய பின் ச.எண்.1052/4ல் பிரதிவாதி தண்ணீர் எடுத்து சென்று பிரதிவாதி விவசாயம் செய்யாமல் இருப்பதற்காகதான் ஒருவர் மாற்றி ஒருவர் பிரதிவாதிகள் மீது வழக்கு

தாக்கல் செய்த பிரச்சனை கொடுத்து வருகிறோம்ள ன்றால் சரியல்ல. அதனால் தான் அ.வ.எண்.9/2005 பற்றி எதுவும் தெரியாதவாறு வழக்கை வடிவமைத்து, அதேபோல் சாட்சியும் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

33) மேற்படி வழக்கை 10 வருடங்களுக்கு முன்பு பிரதிவாதிகள் பதிலுரையில் சொல்லியிருந்தபோதும் அது தெரியவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, தெரிந்து கொள்ள அவசியம் இல்லாததால் தெரிந்துகொள்ளவில்லை. உண்மையான பிரச்சனை குறித்து சொல்லி, உண்மையான பரிகாரம் கோரி இந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த வழக்குமூலமும் இல்லாமல், காரணமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எத்தனை அயிட்டங்களாக சொத்துக்களை காண்பித்துள்ளோம் என்றால் அவ்வாறு சொத்துக்களை அயிட்டங்களாக காட்டவில்லை, வண்டிப்பாதையை மட்டும் காட்டியுள்ளோம். அந்த வண்டிப்பாதை பெரியசாமியின் பாகமான ச.எண்.1052/2, 1051/3, மற்றும் சண்முகத்தின் பாகமான 1051/2, ஆகியற்றின் வழியாக மெயின் ரோட்டிற்கு செல்கிறது. ஆனால் சண்முகம் மற்றும் பெரியசாமியை இந்த வழக்கில் தரப்பினர்களாக காட்டவில்லை என்றால் சரிதான், அவர்கள் என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. அவர்கள் பிரச்சனை செய்யவில்லை என்று என் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் இந்த வழக்கிற்கு தேவையான தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

34) ச.எண்.1052/2, 1051/2 ஆகிய சொத்துக்களின் பிரதிவாதிக்குரிய உண்மையான உரிமையை அ.வ.எண்.9/2005 ல் உறுதி படுத்தியுள்ள நிலையில் அவருக்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வண்டிப்பாதை குறித்து ஏற்கனவே மேற்படி வழக்கில் பிரதிவாதியை கூட்டு உரிமையாளர் என்று சொல்லியுள்ளதால் அவருக்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும், பெரியசாமி, தங்கராஜி, சண்முகம் ஆகிய நான்கு பேரும் கூட்டாக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும், பிரதிவாதியை அவருடைய

சொத்தான ச.எண்.1051/2, 1052/4 ஆகிய சொத்துக்களை அனுபவிக்க விடாமல் நாங்கள் சதி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தான் மேற்கண்ட வழக்கு குறித்து தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. முழுமையாக தீர்மானிக்கப்பட்ட சங்கதியை குறித்து அதில் நான் தரப்பினர் இல்லை என்ற கணக்கில் என்னை முன் நிறுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், உண்மை தன்மை குறித்து மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு அதிக நஷ்ட ஈட்டுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.